DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No.133 of 2025**
**LW-7 Examined as PW-6**

| Name:திரு.சுப்பிரமணி | Age: |
|---|---|
| Father Name:சுந்தரம்<br>Husband Name: | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Tmt.Abirami, Gr.III Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 02.09.2026 | |

**02.09.2026**

எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம் 12.10 PM**

**அ.சா.6. – முதல் விசாரணை**

நான் தற்போது பெருநகர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 28.04.2025 ம் தேதி சாலவாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது முகமது ரபிக், த/பெ. முகமது அசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 56/2025, பிரிவுகள் 329(3), 296(பி), 115(2), 351(3) BNS வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.அ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமரேசன், ஏழுமலை ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கின் புகார்தாரர் முகமது ரபிக் மற்றும் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் குமார் கண்ணகி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பார்வை மகசர்

சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரி காவல் துறையில் தலைமை காவலராக கூடுவாஞ்சேரியில் பணியாற்றி வந்ததால் மேல் விசாரணைக்காக காவல் நிலைய உதவி ஆய்வாளர் பார்வைக்கு வழக்கு கோப்பினை வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பாக எவ்வளவு காலமாக நான் சாலவாக்கம் காவல் நிலையத்தில் பணியாற்றி வந்தேன் என்றால் நான்கு மாதங்களாக பணியாற்றி வந்தேன். அ.சா.1 அளித்த புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் புகாரில் என்னவென்றால் மாலை 5.30 மணி என்ன குறிப்பிடப்பட்டுள்ளது. எத்தனை மணிக்கு புகாரை நான் பெற்றேன் என்றால் அன்றைய தினம் இரவு சுமார் 8:00 மணி அளவில் பெற்றேன். மேற்படி நான் புகார் பெற்ற நேரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சாலவாக்கமும் சீதாபுரமும் வெவ்வேறு கிராமங்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பண்ணை சீத்தாபுரத்தில் உள்ளதா அல்லது சாலவாக்கத்தில் உள்ளதா என்றால் சீத்தாபுரத்தில் அமைந்துள்ளது. மேற்படி பண்ணை அ.சா.1 ற்கு சொந்தமானது என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.3 ஆகியோர் மேற்படி பண்ணையில் தங்கி பணியாற்றி வருபவர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் புகாரினை பெற்று உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிந்துள்ளேன் என்றாலும் சிஎஸ்ஆர் எதுவும் பதியவில்லை என்றாலும் சரிதான்.

29.04.2025 ம் தேதி காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்தேன். புகாரில் பண்ணையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த டியோ இரு சக்கர வாகனத்தில் இருந்த சாவியை முரளி, த/பெ. வேதகிரி எடுத்துக் கொண்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்

விசாரணைக்கு சென்று பார்த்த பொழுது அங்கு அந்த டியோ வாகனம் இருந்ததா என்றால் இருந்தது சாவி இல்லாமல் இருந்தது. மேற்படி வாகனம் இருந்தது குறித்து எனது பார்வை மகசரிலும் மாதிரி வரைபடத்திலும் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

புகாரை அளிக்கும் போது புகார்தாரருடன் யார் வந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் அ.சா.1 முதல் 3 வரையிலானவர்களுக்கு முரளி என்ற பெயர் தெரியாது என்றாலும் பின்னர் கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்றாலும் சரிதான். மேற்படி பெயரை யாரிடமிருந்து கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்ற வகையில் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பட்டியல் சாட்சியாக உள்ள ஜெயராமன் கேள்விப்பட்ட சாட்சி என்றால் சரிதான். அ.சா.1 முதல் 3 வரையிரானவர்கள் கண்ணுற்ற சாட்சிகள் என்றால் சரிதான்.

எனது விசாரணையின் போது முரளி கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறார் என்ற விவரம் மட்டுமே தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். எவ்வாறு மேற்படி விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் நான் கோப்பினை முதல் தகவல் அறிக்கை பதிந்து சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் தயார் செய்து மேல் அதிகாரி பார்வைக்கு வைத்து விட்டேன் அவரது விசாரணையில் மேற்படி விவரம் தெரிந்து கொண்டதாக நான் கேட்டு தெரிந்து கொண்டேன்.

எதிரி கட்டையை காண்பித்து மிரட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி கட்ட ஏதேனும் எனது விசாரணையில் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. அ.சா.1 தனது முதல் விசாரணையில் எதிரி மது போதையில் சம்பவ இடத்திற்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எனது விசாரணையில் மேற்படி விவரங்கள்

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தனது விசாரணையின் போது போலிஸ் தெரிவித்து தான் எதிரியின் விவரங்கள் எனக்கு தெரியும் என குறிப்பிட்டு இருந்தால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அ.சா.2 தனது விசாரணையின் போது சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் 3 மணி என குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் தவறுதான். அ.சா.1 ஐ எதிரி கன்னத்தில் தாக்கியதாக அ.சா.2 தனது விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அ.சா.1 இது சம்பந்தமாக மருத்துவமனையில் சிகிச்சை ஏதேனும் பெற்றாரா என்றால் இல்லை.

அ.சா.2 தனது விசாரணையில் ஜெயராமன் என்பவர் தான் புகார் அளித்தார் என குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் தவறுதான். அ.சா.3 தனது விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்தன்று தன்னை போலிசார் விசாரித்ததாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் தவறுதான். ஆஜர் எதிரியின் தந்தை முன்னாள் காவல் ஆய்வாளராக தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றினார் என்றால் சரிதான் அந்த விவரத்தை பின்னால் தெரிந்து கொண்டேன் அவர் சாலவாக்கம் காவல் நிலையத்தில் பணியாற்றினார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரியின் சகோதரர் ராஜேஷ் கண்ணா என்பவரை சாலவாக்கம் காவலர்கள் 2016 ஆம் ஆண்டு தாக்கி அவர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றாலும் ராஜேஷ் கண்ணா மீதும் எதிரியின் தந்தையான வேதகிரி என்பவர் மீதும் சாலவாக்கம் காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் வழக்குக்காக பொய்யாக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அக்காலத்தில் சலவாக்கம் காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த மங்கள பிரியா என்பவர் மீதும் காவலர்கள் மீதும் எதிரியின் தந்தை வேதகிரி மனித உரிமை ஆணையத்தில் ஒரு புகார் அளித்து அந்த புகாரின் அடிப்படையில்

இந்நாள் வரையில் அவர்கள் விசாரணைக்கு சென்று வருகிறார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றாலும் இந்த வழக்கத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் தந்தை மீதும் அவரது சகோதரர் மீதும் சாலவாக்கம் காவல் நிலையத்தில் பதியப்பட்ட குற்ற எண்ணிற்கான வழக்கு இந்நீதிமன்றத்தில் நடந்து எதிரிகள் விடுதலை செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார் அடிப்படையில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை எதிரி பணியாற்றி வந்த கூடுவாஞ்சேரி காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்து அதன் அடிப்படையில் எதிரி தற்போது கிளாஸ் லிஸ்டில் வைக்கப்பட்டுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

நான் சம்பவ இடம் சென்று பார்வை மகசர் தயார் செய்து வரைபடம் வரைந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் குடும்பத்தை பழிவாங்க வேண்டும் என்ற நோக்குடன் மேல் அதிகாரியின் அழுத்தத்தின் பேரில் நடைபெறாத ஒரு சம்பவத்தை ஜோடித்து இந்த வழக்கை பதிந்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்லை. எனது விசாரணையில் குறிப்பிட்டுள்ளது போல் சீதாபுரம் கிராமத்தில் மாட்டு பண்ணை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் பகுதி அருகில் வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பொதுமக்கள் நடமாட்டமும் இல்லாத பகுதி என்றால் சரிதான். Nature of witness: IO

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.45 PM**

Sd/- R.Kritya,
District Munsif cum Judicial Magistrate,
Uthiramerur.